**கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள் சேர்ப்புப் பணி நிலையம்,**
**ஈரோடு மாவட்டம்**
**கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,**
**ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம்,**
**மோகன் குமாரமங்கலம் சாலை, சூரம்பட்டி அஞ்சல்,**
**ஈரோடு – 638009.**

**அறிவிக்கை எண்.6/2020/மா.ஆ.நி** **நாள் 18.06.2020**

**ஈரோடு மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளுக்கு விற்பனையாளர் (Salesman) மற்றும் கட்டுநர் (Packer) தேர்வுக்கான விளம்பரம்.**

கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் 19.06.2020 முதல் 31.07.2020 பிற்பகல் 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | நேரடி நியமன பதவி விபரம் | சம்பள விபரம் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1) | நியாயவிலைக் கடை விற்பனையாளர்(Salesman) | 1) தொகுப்பு ஊதியம் ரூ.5000/– நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை | 1) நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | 01 |
| | | | 2) வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 10 |
| | | 2) ஓராண்டுக்கு பிறகு ஊதிய விகிதம் ரூ.4300–12000/– | 3) தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் | 04 |
| | | | 4) தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் | 85 |
| | | | 5) இதர வகைச் சங்கங்கள் | 02 |
| | | | **மொத்தம்** | **102** |
| 2. | நியாயவிலைக் கடை கட்டுநர் (Packer) | 1) தொகுப்பு ஊதியம் ரூ.4250/– நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை | 1) நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | 01 |
| | | 2) ஓராண்டுக்கு பிறகு ஊதிய விகிதம் ரூ.3900–11000/– | 2) தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் | 02 |
| | | | 3) வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 03 |
| | | | **மொத்தம்** | **06** |

மேற்படி காலிப்பணியிடங்கள் தோராயமானது மற்றும் மாறுதலுக்குட்பட்டது.

## நிபந்தனைகள்:-

1. மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின் போது அரசுப் பணியாளர்கள் தேர்வுக்கு பின்பற்றப்படும் வகுப்பு சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் கீழ்கண்டவாறு பின்பற்றப்படும்.

| பதவி | மொத்த காலிப் பணியிடம் | வகுப்பு வாரி இட ஒதுக்கீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொது (GT) | பிற்படுத்தப் பட்டோர் (BC) | பிற்படுத்தப் பட்டோர் (இஸ்லாமியர்) BC(M) | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் (MBC/DC) | ஆதி திராவிடர் (SC) | ஆதி திராவிடர் அருந்ததியர் (SC(A) | பழங்குடியினர் (ST) |
| விற்பனையாளர் | 102 | 31 | 26 | 05 | 20 | 15 | 03 | 02 |
| கட்டுநர் | 06 | 01 | 01 | 01 | 01 | 01 | 0 | 01 |

2. நியமனத்தின் போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாத போது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையை தகுதிவாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண்களை கொண்டு நிரப்பப்படும்.

3. ஆதரவற்ற விதவைகள், மாற்றுத்திறனாளிகள் (கண் பார்வையற்றோர் தவிர) மற்றும் முன்னாள் இராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் இந்த நியமனத்தின் போதும் பின்பற்றப்படும்.

4. நியாயவிலைக்கடை விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தனித்தனியே அதற்குரிய விண்ணப்பங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

5. மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்புப் பணி நிலையத்தில் உரிய காரணங்களுடன் மேல்முறையீடு செய்யப்பட வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

6. **உடற்தகுதி சான்றிதழ்:-**

மேற்படி பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழினைச் சமர்ப்பிக்க வேண்டும். தகுதி பெற்ற கண் மருத்துவரிடம் பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் மேற்படி பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பட்ட சான்றிதழினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

## <u>1. தகுதிகள்:-</u>

அ. வயது (01.01.2020அன்றுள்ளவாறு)

1. விண்ணப்பதாரர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். (அதாவது 01.01.2002 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்.)

2. விண்ணப்பதாரர்கள் 01.01.2020 அன்று கீழ்க்கண்ட வயதினைப் பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| i) | ஆதி திராவிடர், அருந்ததியர், பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்பினைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | **வயது வரம்பு இல்லை** |
| ii) | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | **வயது வரம்பு இல்லை** |
| iii) | மேற்படி வகுப்பினைச் சாராத இதர விண்ணப்பதாரர்கள் | **30 வயது** |
| iv) | மாற்றுத் திறனாளிகள் / முன்னாள் இராணுவத்தினர்களுக்கு அரசாணைப்படி வயது வரம்பு விலக்களிக்கப்படும் | |

## ஆ. கல்வித் தகுதி :-

1. நியாயவிலைக் கடை விற்பனையாளர் — மேல்நிலை வகுப்பு (HSC) தேர்ச்சி அல்லது அதற்கு சமமான கல்வித்தகுதி.

2. நியாயவிலைக் கடை கட்டுநர் — பள்ளி இறுதி வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

## <u>2. தமிழ் மொழித் திறன்:-</u>

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று தமிழ் மொழியில் எழுதப் படிக்க போதுமான திறன் உள்ளவராக இருக்க வேண்டும்.

## <u>3. தெரிவு முறை:-</u>

மேற்படி காலிப் பணியிடங்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகிய அனைத்திற்கும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும். இப்பணியிடங்களுக்கான நபர்கள், நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில், வகுப்பு வாரி சுழற்சிக்கு உட்பட்டும் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்குக் கட்டாயமாக வருகை புரியவேண்டும். நேர்முகத் தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி பணியிடங்களுக்கு தேர்தெடுக்கப்பட மாட்டார்கள்.

## 4. காலிப் பணியிடங்களுக்கான விருப்பம் தெரிவித்தல்

விண்ணப்பதாரர்கள், தாங்கள் எந்த கூட்டுறவு நிறுவனத்தின் நியாயவிலைக்கடைக்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான விருப்பத்தை நேர்முகத் தேர்வின்போது தெரிவிக்க வேண்டும். விண்ணப்பதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கான பணியிடம் ஒதுக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டால் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் முடிவின்படி அவர்களுக்குப் பணியிடம் ஒதுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது.

## 5. விண்ணப்பங்கள் விநியோகித்தல்:-

மேற்படி நியாயவிலைக் கடை விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணி நியமனங்களுக்கான விண்ணப்பப் படிவத்தை கீழ்க்கண்ட அலுவலகங்களில் 19.06.2020 முதல் 31.07.2020 வரை பிற்பகல் 5.45 மணியளவில் அனைத்து வேலை நாட்களிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

1. ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, தலைமையகம்.
2. ஈரோடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை (சிந்தாமணி)
3. பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.
4. பவானி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.
5. கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.
6. சத்தி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

## 6. விண்ணப்பப் பதிவுக் கட்டணம்:-

மேற்படி பணி நியமனத்திற்கான விண்ணப்பதிவு கட்டணம் நியாயவிலைக்கடை விற்பனையாளர் பணியிடத்திற்கு ரூ.150/-ம் மற்றும் கட்டுநர் பணியிடத்திற்கு ரூ.100/-ஐ (கட்டண விலக்குக்கு தகுதியுள்ளோர் தவிர ஏனையோர்) ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகளில் மூன்று படிகள் கொண்ட செலுத்துச் சீட்டு (Triplicate Challan) மூலம் செலுத்தி, அதில் ஒரு படியினை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒரு முறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி அளிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே விண்ணப்பிக்கும்போது ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் தனித்தனியே கட்டணம் செலுத்தப்பட வேண்டும். கட்டண விலக்கிற்கு அனுமதிக்கப்பட்டவர் தவிர இதர விண்ணப்பதாரர்கள் கட்டணம் செலுத்தி செலுத்துச் சீட்டின் பிரதியினை இணைத்திருக்க வேண்டும். கட்டணம் செலுத்தாமல் விண்ணப்பம் அனுப்பியிருப்பின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், அனைத்து வகுப்பைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதரவற்ற விதவைகள் மேற்கண்ட விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர்.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள், அனைத்து மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவச் சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் வருவாய்க் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து சான்று பெற்றிருக்க வேண்டும்.

## 7. விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய இணைப்புகள்:-

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து சான்றிதழ்களின் சுய சான்றளிக்கப்பட்ட நகல்களையே இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பக்கூடாது. சான்றளிக்கப்பட்ட சான்றிதழ்கள் இணைக்கப்படாமல் அனுப்பப்பட்ட விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும்.

## 8. நேர்முகத் தேர்வு:-

நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பத்தில் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பப்படும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும், இது தொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது.

## 9. தடையில்லா சான்றிதழ்:-

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக (நிரந்தரமாகவோ, அல்லது தற்காலிகமாகவோ) இருக்கும்பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தடையில்லா சான்றிதழினை நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

## 10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெறுதல்

1. விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. விண்ணப்பப் படிவங்கள் பந்து முனை பேனா (Ball Point Pen) கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் இட வேண்டும். கையொப்பம் இல்லாமல் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. விண்ணப்பப் படிவத்தில் அனைத்து கலங்களும், இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் அடிப்படையில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. விண்ணப்பத்துடன் விண்ணப்பக் கட்டணம் (விலக்கு கோருபவர்களைத் தவிர) தவறாமல் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரர் அவரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டுவதுடன் தனி ஒரு புகைப்படத்தினை இணைக்க வேண்டும். மேலும் சுய முகவரியிட்ட ரூபாய் 25.00க்கான தபால் வில்லை ஒட்டிய 24X10 செ.மீ. உறையினையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

11) இதர நிபந்தனைகள்:

1. நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டு விண்ணப்பதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தெரிவு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் உடனடியாக இரத்து செய்யப்படும்.

2. காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையினை இரத்து செய்வதற்கு / திரும்பப் பெறுவதற்கு / திருத்துவதற்கு மற்றும் கெடு தேதியை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திற்கு முழு உரிமையுண்டு.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தபால் மூலம் தலைவர் / மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம், மோகன் குமாரமங்கலம் சாலை, சூரம்பட்டி அஞ்சல், ஈரோடு – 638009 என்ற முகவரிக்கு 31.07.2020 மாலை 5.45க்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

தலைவர்/ மண்டல இணைப்பதிவாளர்,
மாவட்ட ஆள் சேர்ப்புப் பணி நிலையம்,
ஈரோடு மாவட்டம்.